[14th December 1959

Plantation Labour Housing Scheme

* 157 *Q.*—SRIMATHI KOLANTHAI AMMAL,
SRIMATHI A. S. PONNAMMAL,
SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : } கனம்

மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

இம் மாநிலத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதாவது இருக்கின்றதா ?

THE HON. SRI V. RAMAIAH : Yes. The Government of India have formulated a loan scheme, known as the " Plantation Labour Housing Scheme ", for the construction of houses for workers in Plantations.

SRIMATHI A. S. PONNAMMAL : அப்படியானல், இது எல்லாப் பகுதிகளிலும் அமல் நடத்தப்படுகிறதா?

THE HON. SRI V. RAMAIAH : இந்தத் திட்டப்படி ப்ளான்டேஷன்ஸ் இருக்கும் இடங்களிலெல்லாம் சிறு தோட்டக்காரர்கள் வீடுகள் கட்ட முன்வந்தால், அதற்கு அவர்களுக்கு சர்க்கார் உதவி செய்துவருகிறது.

SRI J. MATHA GOWDER : தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு அவசியம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தொழிலாளர்கள் சட்டத்தில் எத்தனை பிரிவுகளை கட்டாயம் அமல் நடத்த வேண்டுமென்று ராஜ்ய வீட்டு வசதி மந்திரிகள் நான்காவது மகாநாட்டில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது? அவைகளை உடனடியாக அமல்நடத்த அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI V. RAMAIAH : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI K. PONNIAN : தோட்ட முதலாளிகள் தங்கள் தோட்டங்களில் அமர்த்தியிருக்கும் தொழிலாளர்களுக்கான வீடுகளை வருடத்தில் 8 சதவிகிதம் தான் புதுப்பிக்க வேண்டும் என்று கூறும் கட்டளையை, குறைந்தது 20 சதவிகிதமாவது புதுப்பிக்க வேண்டும் என்று கூறும் வகையில் மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த உபகேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. சிறு தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சிறு தோட்டக்காரர்களுக்கு உதவி செய்வதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பற்றியது மூலக் கேள்வி. அந்தத் திட்டத்தினல் சில சிறு தோட்ட முதலாளிகள் பயனடைந்து வருகிருர்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு உதவும் முறையில் அரசாங்கம் எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்க முன்வருகிறது? அந்தத் தொகையை தோட்ட முதலாளிகள் எந்த வகையில் திருப்பிக் கொடுக்க வேண்டும்?

14th December 1959]

The Hon. Sri V. RAMAIAH : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3·46 லட்ச ரூபாய் இதுபோன்ற திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் இதுவரை 2·74 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கேட்ட மற்ற தகவல்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

State Housing Board

*** 158 *Q*.—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI) :** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) **State Housing Board** எவ்வளவு காலமாக இயங்கி வருகிறது?

(ஆ) அதில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார்?

(இ) இந்த போர்டு பரீட்சார்த்தமானதா? நிரந்தரமானதா?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) The non-statutory State Housing Board is functioning from May 1958.

(*b*) Members of the State Housing Board are—

(1) Chairman (Sri D. Gnanaolivu, I.A.S.);

(2) Chief Engineer, Public Works Department (General);

(3) Commissioner, Corporation of Madras;

(4) Commissioner of Labour;

(5) Inspector of Municipal Councils and Local Boards;

(6) Joint Director of Town Planning; and

(7) Registrar of Co-operative Societies.

(*c*) The Board is non-statutory for the present.

Sri S. M. ANNAMALAI : ஸ்டேட் ஹௌஸிங் போர்டின் முக்கிய வேலை என்ன? அதன் ரிப்போர்டு ஏதாகிலும் சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri V. RAMAIAH : Sir, the functions of the Board are mainly to co-ordinate, regulate and expedite the planning and implementation of housing schemes, apportion allotted funds, recommend or lay down general policy in regard to housing schemes, approve designs of houses and so on. The Housing Board will also take up the execution of housing or development schemes if the Government so direct. Till September 1959, the Board has met sixteen times.